Legislators and Administration.

* 3 *Q.*—SRI V. SANKARAN : }
SRI S. MADHAVAN : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any draft code has been framed by the Union Government to regulate relationship of members of State Legislatures and the Administration; and

(*b*) if so, the provisions of the said code in detail?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) This Government have not received any draft code from the Union Government so far.

(*b*) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : சட்டசபை உறுப்பினர்கள் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் காணவருகின்ற நேரத்தில் மணிக்கணக்கிலே காத்துக்கொண்டிருக்கிற நிலை ஏற்படுகிறது. சட்டசபை உறுப்பினர்கள், அமைச்சர்களையும் அதிகாரிகளையும் பார்ப்பதற்கு வந்திருக்கிறார்கள் என்றால், குறைந்த நேரத்தில் பார்ப்பதற்கு வசதி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டசபை உறுப்பினர்கள் வந்தால் அவர்கள் காத்துக்கொண்டிருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அவா, என்னுடைய கவலையும் கூட. அவர்கள் வருவதற்கு முன்பு டெலிபோன் மூலமாக ' நான் வந்து பார்க்க விரும்புகிறேன் ' என்று தெரிவித்துவிட்டு குறிப்பிட்ட நேரத்தில் வந்தால் தாமதம் இன்றி பார்க்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : மத்திய சர்க்கார் இப்போது நடைபெறும் பார்லிமென்ட் கூட்டத்திலே இதுமாதிரி வசதி ஏற்படுத்துவதற்கு இருக்கிறார்கள். இதையொட்டி மாநில சர்க்கார்களை யோசனை கேட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மன்றத்தின் சபாநாயகர், அந்த மன்றத்தின் தலைவர் மற்றவர்களும் சேர்ந்து ஒரு கோட் ஆப் காண்டக்ட் ஏற்படுத்தலாம் என்பதுதான் கருத்து.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்ற காரணத்தினாலே நியாயமாகவும் தகுதியாகவும் கேட்கக்கூடிய வாய்ப்புகள் நிராகரிக்கப்படுகின்றன என்ற காரணத்தாலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் கண்டித்திருக்கிறது என்பதையொட்டி நம்முடைய அரசாங்கம் அந்த அடிப்படையில் விதி செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸ் கமிட்டி எதைக் கண்டித்திருக்கிறது, அதில் என்ன கருத்து இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினருக்கு தெரிந்திருக்கலாம். நான் முன்னமேயே சொன்னேன், கனம் சபாநாயகர் அவர்களும், அந்த மன்றத் தலைவர் அவர்களும் சேர்ந்து ஒரு கோட் ஆப் காண்டக்ட் தயாரிக்கலாம் என்று.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே எப்படிப்பட்ட தொடர்பு இருக்கவேண்டும் என்ற குறிப்பை மேற் கொண்டிருப்பதாகச் செய்தித் தாள்களில் செய்தி வந்தது. அப்படிப்பட்ட ஒரு முறை வகுக்கப்பட்டு, மாநில அரசு தனக் கேற்ற ஒரு முடிவு எடுப்பதற்கு மாநில அரசுக்கு உதவியாக இருக் கும்படி அப்படிப்பட்ட அறிக்கை மாநில அரசுக்கு அனுப்பி வைக் கப்பட்டிருக்கிறதா ? மாநில அரசு எடுக்க இருக்கிற அந்தகைய நடவடிக்கைகளோடு அதுவும் சேர்த்துக் கவனிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. ஆனால், கனம் சபாநாயகர் அவர்களும், கனம் தலைவர் அவர்களும் சேர்ந்து, என்ன என்ன தகவல் வேண்டும், மத்திய அரசு என்ன முடிவு செய்திருக்கிறது, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், நாம் என்ன செய்யவேண்டும்' என்பதை யெல்லாம் கட்சித் தலைவர்களோடு கலந்து முடிவு செய்யலாம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : எது தலையீடு, எது முறையீடு என்று இதுவரையிலும் ஏதேனும் வரையறை செய்யப்பட்டிருக் கிறதா ? இன்ன காரியங்களெல்லாம் தலையீட்டுக்குட்பட்டவை. இன்ன இன்ன காரியங்கள் எல்லாம் முறையீட்டுக்குட்பட்டவை என்று ஏதேனும் வரையறை இதுவரையிலும் செய்யப்பட்டிருக் கிறதா ? அப்படி இல்லையென்றால், இன்ன இன்ன காரியம் முறையீடு இன்ன இன்ன காரியம் தலையீடு என்று எப்படிப் பகுத்துத் தெரிந்து கொள்ள முடியும் என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எது தலையீடு, எது முறையீடு என்பதைப்பற்றி ஆராய்ந்து செய்வதற்குத்தான் கனம் சபாநாயகர் அவர்களும் அந்த மன்றத்தின் கனம் தலைவர் அவர்களும் இதைக் கவனிக்க வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : இந்த மன்றத்தின் கனம் சபாநாயகர் அவர்களும், அந்த மன்றத்தின் கனம் தலைவர் அவர்களும் கலந்து ஒரு ஏற்பாடு செய்வார்கள், கட்சித் தலைவர்களையும் அப்பொழுது கலந்து கொள்ளுவார்கள் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியானால், அந்தப் பணி தொடங்கப்பட்டு

விட்டதா ? தொடங்கிய பணி குறிப்பாக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப் பெற வேண்டும் அல்லது முடிக்கப்படும் என்ற நிலையைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தகவல் தெரிவிக்க வேண்டுமென்றால், கனம் சபாநாயகர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சில எம்.எல்.-ஏக்கள் அமைச்சர்களிடமும் மற்றவர்களிடமும் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அதிகாரிகளை யெல்லாம் மிரட்டும்படியான ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்படுகிற வகையில், அதற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில், இந்த அரசாங்கம் அதிகாரிகளுக்கெல்லாம் சில உத்தரவுகளைப் பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எம்மாதிரி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் விரும்புகிறார் என்று எனக்கு தெரியவேண்டும். எம்மாதிரி தலையீடு இருக்கிறது என்ற விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால், அதிகாரிகள் தலையீட்டுக்கு இடங் கொடுக்க மாட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த விதிகள் தயாரிக்கப்படும்போது மாநில மட்டத்திற்கு மட்டும் பொருந்தக்கூடியதாகத் தயாரிக்கப்படுமா ? அல்லது ஜில்லா மட்டத்திற்கும் பொருந்தக்கூடியதாக விதிகள் தயாரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களும் கனம் தலைவர் அவர்களும் கவனிப்பது இங்குள்ள சட்ட மன்றங்களை ஒட்டியது ; சட்ட மன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களை ஒட்டியது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, ஆளும் கட்சி எம்.எல்.ஏ.-க்களாக இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு வாய்ப்பு, ஒரு சலுகை இருப்பதும், எதிர்க் கட்சிகளில் உள்ள எம்.எல்.ஏ.-க்களுக்கு அவ்வளவு இல்லை என்பதும் கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கலாம் ; இல்லையென்றால், இப்போதாவது நான் கொண்டு வருகிறேன். அதையாவது நிவர்த்தி செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் அனுமதிக்கப்பட்டு விவாதத்திற்கு வருகிறபோது அதையெல்லாம் சொல்லலாம்.

Speeches arranged by Dravida Kazhagam

* 4 *Q.*—Sri C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the series of discourses by name " இராமாயணச் சொற்பொழிவுகள் " arranged and conducted by the Madras City Units of Dravida Kazhagam in